# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 369/ந/2025, நாள் 30.03.2026

| | | |
|---|---|---|
| G.கோவிந்தன்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி,<br>விருதுநகர் மாவட்டம். | – | எதிர்மனுதாரர் |

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், வார்டு – 15, மாயாண்டிப்பட்டி தெற்கு தெரு, கதவு எண்.32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.கோவிந்தன் என்பவரது 29.10.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.10.2025 அன்று பெறப்பட்டு, 369/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், வார்டு – 15, மாயாண்டிப்பட்டி தெற்கு தெரு, கதவு எண்.32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.கோவிந்தன் என்பவரின் 29.10.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“நான் மேற்கண்ட முகவரியில் 275 சதுர அடியில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகின்றேன். மாடி கிடையாது. வீட்டில் இடவசதி இல்லாததால் குடிநீர் குழாய் வாசலில் போடப்பட்டுள்ளது. (1) கடந்த 2024–2025ம் ஆண்டிற்கான சொத்துவரி விதிப்பில் முதல் அரையாண்டு வரியாக ரூ.599/– போடப்பட்டு, என்னிடம் வசூலிக்கப்பட்டது. ஆனால், நகராட்சி மூலம் கொடுக்கப்பட்ட R.T.I. அறிக்கையில் சொத்துவரி உயர்வு செய்யப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. 2023–2024ல் முதல் அரையாண்டு வரி ரூ.81/– என்னிடம் வசூலிக்கப்பட்டதால், 2024–2025க்கும் ரூ.81/– வசூல் செய்யப்படுவதற்கு, பதிலாக ரூ.518/– கூடுதலாக ரூ.599/– வசூலிக்கப்பட்டதால் முதல் அரையாண்டு வரியில் கூடுதலாக பெற்ற ரூ.518/–ஐ என்னிடம் திருப்பி கொடுக்க உத்தரவிடுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(2) கடந்த 2024–2025 ஆம் ஆண்டிற்கான சொத்துவரி விதிப்பில் இரண்டாம் அரையாண்டு வரியாக ரூ.599/– போட்டு, என்னிடம் வசூலிக்கப்பட்டது. ஆனால் நகராட்சி மூலம் கொடுக்கப்பட்ட R.T.I. அறிக்கையில் 6 சதவீதம் சொத்துவரி உயர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. 2023–24ல் இரண்டாம் அரையாண்டு வரியாக ரூ.81/– வசூல் செய்யப்பட்டதால், 2024–2025ஆம் அரையாண்டு வரியாக ரூ.81.00 + (6%) 5.00=ரூ.86/– வசூல் செய்யப்படுவதற்கு பதிலாக ரூ.513/–

கூடுதலாக வசூலிக்கப்பட்டதால் ரூ.513/—ஐ என்னிடம் திருப்பி கொடுக்க உத்தரவிடுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(3) நடப்பு நிதி ஆண்டிற்கான (2025—2026) சொத்துவரி விதிப்பில் 6% 2024—2025லிருந்து உயர்வு செய்யப்பட்டதால்,

| | | |
|---|---|---|
| 2025—2026 முதல் அரையாண்டு வரியாக | — | ரூ. 86.00 |
| இரண்டாம் அரையாண்டு வரியாக | — | ரூ. 86.00 |
| திடக்கழிவு மேலாண்மை கட்டணம் முதல் + இரண்டாம் அரையாண்டு சேர்த்து | — | ரூ.240.00 |
| 2025—2026க்கான சொத்து வரிவிதிப்பு | — | ரூ.412.00 ஆக |

நிர்ணயம் செய்து உத்தரவிடகேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சி மூலம் கொடுத்த தகவல் உரிமை சட்ட பதில்களின் அடிப்படையில், 2024—2025ல்

(1) முதல் அரையாண்டில் கூடுதலாக RTI தகவலுக்கு முரணாக வசூலித்த தொகை ரூ.518/—

(2) இரண்டாம் அரையாண்டில் கூடுதலாக RTI தகவலுக்கு முரணாக வசூலித்த தொகை ரூ.513/—

(3) 2025—2026ல் தகவல் அறியும் உரிமை சட்ட பதில்களுக்கு முரணாக ரூ.858/— போட்ட அறிவிப்பை ரத்து செய்து ரூ.412/— நிர்ணயம் செய்யும்படி தங்களை பணிவன்புடன் வேண்டிக் கொள்வதோடு, கூடுதலாக பெற்ற ரூ.1031/—ஐ திருப்பி கொடுக்க உத்தரவிடும்படியும் மீண்டும் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்".

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.6759/2025/அ1, நாள்11.02.2026ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில்:-

"திரு.கோ.கோவிந்தன் என்பவரின் விண்ணப்பத்தில் சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197க்கு அரையாண்டு சொத்துவரி ரூ.599/— குறைக்க கோரியுள்ளார்.

திருவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக அறிவிப்பு ந.க.எண்.4877/2024 நாள் 09.12.2024—ல் சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197க்கு அரையாண்டு சொத்துவரி ரூ.599/— என 160 சதுர அடிக்கு சரியான அளவில் நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு நீதிமன்ற வளாகம், ஸ்ரீவில்லிபுத்தூர் மனு எண். LSP/201/25ல் காணும் விவரப்படி விருதுநகர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் விண்ணப்பம் செய்து 04.04.2025ம் தேதி விசாரணை நடைபெற்று அதன் முடிவுகள் பற்றிய கோப்புகள் எதுவும் இல்லை என்ற விவரம் தெரியவருகிறது.

xxxxxx ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதி வார்டு எண்.15 மாயாண்டிப்பட்டி தெற்கு தெருவில் கதவு எண்.78/32ல் அமைந்துள்ள வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197க்கு சொத்துவரி விதிப்பு குறைக்க கோரப்பட்டுள்ளது.

மேற்படி சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197க்கு 2024–2025ம் ஆண்டு வரை ரூ.1198+360 = ஆக கூடுதல் 1558 நிலுவையின்றி செலுத்தியுள்ளார். மேற்படி சொத்துவரி தொடர்பாக நேராய்வின்பொழுது மேற்படி வீடு ஆர்.சி.சி. கட்டிடம் 15 x17 = 255 சதுர அடி அளவுள்ளதாக அமைந்துள்ளது. மேற்படி வீட்டிற்கு தற்போது அரையாண்டிற்கு ரூ.309/– மற்றும் திடக்கழிவு (SUC) திடக்கழிவு மேலாண்மை கட்டணம் ரூ.120/– ஆக கூடுதல் ரூ.429/– உள்ளது. ஓர் ஆண்டிற்கு ரூ.858/– நிலுவை உள்ளது. மேற்படி வீடு 'சி' மண்டலத்தில் அமைந்துள்ளது. மனுதாரரிடம் கட்டிட அனுமதி மற்றும் ஆவணங்களை இந்நகராட்சி வருவாய் உதவியாளர் நேரில் கேட்கும்பொழுது மனுதாரர் கொடுக்க மறுத்துவிட்டார்.

மேற்படி மனுதாரரின் சொத்துவரி குறைப்பு கோரிக்கையின் அடிப்படையில் மனுதாரர் பெற்ற கட்டிட அனுமதி மற்றும் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 6759/2025/அ1, நாள் 09.02.2026 மூலம் மனுதாரரிடம் கோரப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் சமர்ப்பிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் ஸ்தல ஆய்வு செய்து சொத்துவரி குறைப்பு தொடர்பாக 15 தினங்களுக்குள் இறுதியான அறிக்கை அனுப்பி வைக்கிறேன் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மேற்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின் 11.02.2026 நாளிட்ட கடிதத்தில் 15 தினங்களுக்குள் இறுதியான அறிக்கை அனுப்பி வைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.6759/2025/அ1, நாள் 24.02.2026–ல் மனுதாரரின் புகார் மனுமீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து கீழ்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது:

"மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் மேற்படி சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197க்கு சொத்துவரி குறைப்பு தொடர்பாக இந்நகராட்சியில் பணிபுரிந்த சம்மந்தப்பட்ட வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளருக்கு இவ்வலுவலக 11.02.2026 நாளிட்ட குறிப்பாணை ந.க.எண்.6759/2025/அ1 வழங்கப்பட்டு விபரம் கோரப்பட்டது. திருமதி. ச.லட்சுமி முன்னாள் வருவாய் ஆய்வர், தற்போது உதவியாளர் இராஜபாளையம் நகராட்சி என்பவரின் 18.02.2025 நாளிட்ட பதிலுரை மற்றும் திரு. அந்தோனி ஜான் பீட்டர், முன்னாள் வருவாய் உதவியாளர், தற்போது இளநிலை உதவியாளர் இராமநாதபுரம் நகராட்சி என்பவரின் 23.02.2026 நாளிட்ட பதில்களின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.

மனுதாரர், மேற்படி சொத்துவரி குறைப்பு தொடர்பாக விருதுநகர் மாவட்ட பணிகள் ஆணைக்குழு மாவட்ட நீதிமன்றம் கட்டிடம், ஸ்ரீவில்லிபுத்தூர் LSP 201/2025 DLSA 45134/2025, 02.05.2025 நாளிட்ட கடிதத்தின்படி விருதுநகர் மாவட்ட பணிகள் ஆணைக்குழு மாவட்ட நீதிமன்றத்தில், வழக்கு எண். LSP 201/2025 மூலம் சமரச தீர்வு ஏற்படுத்தி மனுதாரருக்கு சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197க்கு ஏற்கனவே உயர்த்தப்பட்ட அரையாண்டு சொத்துவரி ரூ.599/–, தற்போது 2025–26ம் ஆண்டு முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.306/– ஆக குறைக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.".

5) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 03.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

"திருவில்லிபுத்தூர், மாயாண்டிப்பட்டி தெற்கு தெருவில் எனது குடியிருப்பு வீடான கதவு எண்.32–க்கு சொத்து வரியானது 2023–24ல் ரூ.396/– செலுத்தி உள்ளேன். அதில் முதல் அரையாண்டுக்கு ரூ.81/– , இரண்டாவது அரையாண்டுக்கு ரூ.81/–ம், குப்பை வரி முதல்

அரையாண்டுக்கு ரூ.120/–, இரண்டாம் அரையாண்டுக்கு ரூ.120/–ம் ஆக மொத்தம் ரூ.402/– செலுத்தி உள்ளேன். அதில் ரூ.6/– தள்ளுபடி செய்து ரூ.396/– ரசீது போடப்பட்டுள்ளது.

2024–25ல் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி முதல் அரையாண்டுக்கு எவ்வளவு ரூபாய் வரி உயர்த்தியுள்ளதாகவும், இரண்டாம் அரையாண்டுக்கு எவ்வளவு ரூபாய் உயர்த்தியுள்ளதாகவும் நான் கேட்டிருந்தேன். நகராட்சியின் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பதில்படி முதல் அரையாண்டுக்கு வரி உயர்வு செய்யப்படவில்லை எனவும், இரண்டாம் அரையாண்டுக்கு 6% ரூ.5/– (ரூபாய் ஐந்து மட்டும்) உயர்வு செய்துள்ளதாகவும் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதலால் இதற்கு நேர்மாறாக என்னிடம் முதல் அரையாண்டுக்கு ரூ.599/–ம், இரண்டாம் அரையாண்டுக்கு ரூ.599/–ம் குப்பை வரியாக ரூ.180 + 180 = ரூ.360/– ஆக மொத்தம் ரூ.1564/– தள்ளுபடி ரூ.23/–போக ரூ.1541/–க்கு ரசீது கொடுக்கப்பட்டுள்ளது.

தகவல் உரிமைச்சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின்படி முதல் அரையாண்டுக்கு ரூ.81/–க்கு பதிலாக கூடுதல் தொகையாக ரூ.599/– பெறப்பட்டது. இரண்டாம் அரையாண்டுக்கு ரூ.86/–க்கு பதிலாக கூடுதல் தொகையாக ரூ.599/– பெறப்பட்டது. குப்பை வரி ரூ.240/–க்கு பதிலாக ரூ.360/– பெறப்பட்டது. ஆக மொத்தம் ரூ.1564/–ல் ரூ.23/– தள்ளுபடி போக வித்தியாச தொகையாக ரூ.1541 – 407 = ரூ.1134/– என்னிடம் திரும்ப ஒப்படைப்பதற்கு ஆவன செய்யும்படி மாண்புமிகு இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மனுவானது திருவில்லிபுத்தூரில் உள்ள சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் விசாரணை நடைபெற்றதற்கு பின்னரே நான் நகராட்சியிடம் மனு செய்திருந்தேன். ஆதலால் நகராட்சி ஆணையர் கூறிய ரூ.858/–ஐ நான் ஏற்றுக்கொள்ளவில்லை. தகவல் அறியும் உரிமைச்சட்டமானது பாமர மக்களுக்காக உள்ளதை உள்ளபடியே தகவல் அளிப்பதற்கான உன்னதமான சட்டமாகும். எனவே அதுதான் உண்மை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் நகராட்சியின் பதில்படியே முதல் அரையாண்டு மற்றும் இரண்டாம் அரையாண்டு மற்றும் குப்பை வரியும் சேர்த்து ரூ.407/– மட்டுமே சொத்துவரியாக கீழ்க்கண்ட விவரப்படி நிர்ணயிக்க ஆவன செய்யும்படி இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 2024–25 முதல் அரையாண்டு வரி | – | ரூ. 81.00 |
| 2024–25 இரண்டாம் அரையாண்டு வரி | – | ரூ. 86.00 |
| குப்பை வரி (இரண்டு அரையாண்டுக்கும்) | – | ரூ.240.00 |
| மொத்தம் | – | ரூ.407.00 |

மேற்கண்ட ரூ.407/– போக என்னிடம் கூடுதலாக பெறப்பட்ட ரூ.1134/–ம் என்னிடம் திரும்ப வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவத்தில் கேட்டுக்கொள்கிறேன். 2025–26 ஆண்டுக்கும் மேற்கண்டவாறு சொத்துவரியினை நிர்ணயம் செய்யும்படியும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

7) எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையர் 03.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரரின் புகார் மனு தொடர்பாக சொத்துவரி குறித்து ஆய்வு செய்யப்பட்டது. சொத்து வரி விதிப்பு எண்.130/15618 அரையாண்டு சொத்துவரி ரூ.81/– என இருந்ததை நகராட்சியின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி காட்சி ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி ரூ.100/–க்கு கீழ் உள்ள அரையாண்டு சொத்துவரியினை மறு அளவீடு செய்து சொத்துவரி விதிக்க அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் 160 சதுர அடி என நிர்ணயம் செய்து அரையாண்டு சொத்துவரியாக ரூ.599/– மற்றும் குப்பை வரி ரூ.180/–ம் சேர்த்து சொத்துவரி உயர்த்தப்பட்டு மனுதாரர் சொத்துவரியை 2024–25 வரை செலுத்தியுள்ளார்.

மனுதாரர் மேற்கண்ட சொத்துவரி தொடர்பாக விருதுநகர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிடம் மனு எண். LSP 201/25 மூலம் மனு செய்து விசாரணை செய்யப்பட்டு, அப்போதைய வருவாய் ஆய்வராக பணிபுரிந்த திருமதி. க. லட்சுமி அவர்கள் மேற்படி வழக்கில் ஆஜராகி சட்டப்பணி ஆணைக்குழு செயலாளர் அவர்களின் நேரிடையாக விசாரணை செய்து விதிக்கப்பட்ட வரியினை மறு பரிசீலனை செய்யும்படி தெரிவித்ததன் அடிப்படையில், அப்போதைய ஆணையரிடம் ஒப்புதல் பெற்று மேற்படி சொத்துவரி ரூ.309/–ம் குப்பைவரி ரூ.120/– என ஒவ்வொரு அரையாண்டுக்கும் ஆக ரூ.429/– என நிர்ணயம் செய்யப்பட்டு மனுதாரரின் முன்னிலையில் 02.05.2025ல் சமரசம் ஏற்படுத்தி வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பான ரூ.429/– என்பது சரியானது தான் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் விசாரணையின்போது திருவில்லிபுத்தூர் நகராட்சியிலிருந்து பெறப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–க்கான பதில் காண்பிக்கப்பட்டது. மேற்படி பதில் பதிவேடுகளை கண்காணிக்காமல் தவறுதலாக வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.".

8) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின்அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2023–24 ஆண்டிற்கான சொத்துவரி ரூ.402/–ல் தள்ளுபடி ரூ.6/– போக ரூ.396/– (முதல் அரையாண்டு ரூ.81/–, இரண்டாம் அரையாண்டு ரூ.81/–, இரண்டாம் ஆண்டு குப்பை வரி ரூ.240/–) செலுத்தப்பட்டுள்ளது என்பதும், 2024–25ன் முதல் அரையாண்டு சொத்து வரி உயர்வு செய்யப்படவில்லை, இரண்டாம் அரையாண்டு சொத்து வரி 6% ரூ.5/– உயர்வு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் மூலம் மனுதாரருக்கு நகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், 2024–2025க்கான சொத்துவரி ரூ.407 (முதல் அரையாண்டு ரூ.81/– இரண்டாம் அரையாண்டு ரூ.86/– குப்பை வரி ரூ.240/–) வசூலிக்கப்பட வேண்டிய நிலையில் ரூ.1564ல் ரூ.23/–தள்ளுபடி செய்யப்பட்டு ரூ.1541/– (முதல் அரையாண்டு ரூ.599/–ம், இரண்டாம் அரையாண்டு ரூ.599/–ம் குப்பை வரி ரூ.360/–) வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், கூடுதலாக பெறப்பட்ட சொத்துவரித் தொகை ரூ.1134/– (ரூ.1541 – 407 = ரூ.1134/–) திரும்ப வழங்க வேண்டும் என்பதும், 2025–26 ஆண்டுக்கான சொத்துவரி இவ்வாறே நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது."

மனுதாரரின் விண்ணப்பத்தில் அரையாண்டு சொத்துவரி ரூ.599/– (சொத்துவரி விதிப்பு எண்.130/015/900197) என நிர்ணயக்கப்பட்டதை குறைக்க கோரியுள்ளார் என்பதும், சொத்து வரி உயர்வை எதிர்த்து மனுதாரரால் விருதுநகர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் விண்ணப்பித்துக் கொண்டதைத் (மனு எண். LSP 201/2025) தொடர்ந்து, மேற்படி சொத்துவரி தொடர்பாக நேராய்வு செய்யப்பட்டு 'சி' மண்டலத்தில் அமைந்துள்ள மனுதாரரின் ஆர்.சி.சி. கட்டிடம் 15x17 = 255 சதுர அடி அளவுள்ள வீட்டிற்கான அரையாண்டு செத்துவரி ரூ.429/– (சொத்து வரி ரூ.309/– திடக்கழிவு மேலாண்மை கட்டணம் (SUC) ரூ.120/–) என குறைக்கப்பட்டு சொத்துவரி மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் தொடரப்பட்ட வழக்கில் சமரச தீர்வு ஏற்பட்டதால் அதிகமாக வசூலிக்கப்பட்ட சொத்துவரி தொகை ரூ.700/– மனுதாரருக்கு திரும்ப வழங்கப்பட்டுள்ளது என்பதும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் அளிக்கப்பட்ட தகவல் தவறுதலாக உள்ளது என்பதும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில் மனுதாரரின் சொத்துவரி தொடர்பாக விருதுநகர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் தொடரப்பட்ட வழக்கில் (மனு எண். LSP 201/2025) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையர் ஆகியோரிடையே சமரசம் ஏற்பட்டுள்ளதையும், மனுதாரருக்கு சொத்து வரி மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதையும், அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகை மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதையும், மனுதாரரின் புகார் மனுவிற்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொண்டு மனுதாரரின் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் கீழ் பெறப்படும் மனுக்கள் மீது அளிக்கப்படும் தகவல்கள் ஆவணங்களை நன்கு ஆய்வு செய்து சரியான தகவல்களை மனுதாரர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்து செயல்படுமாறு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.G.கோவிந்தன்,
எண்.32, மாயாண்டிப்பட்டி தெற்கு தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர்–626 125,
விருதுநகர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி,
ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி, சென்னை –600 028.

நகல்– மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.